සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

23 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்:**

※ இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டதாகும்.

※ பகுதி **I** இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் பகுதி **II** இலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையும் பகுதி **III** இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** அரசியலுக்கும் அரசியல் விஞ்ஞானத்துக்கும் இடையிலான வேறுபாட்டினை விளக்குக. (20 புள்ளிகள்)

**2.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விபரிக்குக.

(i) அரசுக்கும் பிரஜைகளுக்குமிடையிலான தொடர்பு

(ii) அரசுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான வேறுபாடுகள்

(iii) தேசிய அரசுகள் மீது உலகமயமாதலின் தாக்கம் (10 × 2 = 20 புள்ளிகள்)

**3.** பின்வரும் அரசியல் கருத்தியல்களில் (ideologies) எவையேனும் **இரண்டினது** பிரதான பண்புகளை சுருக்கமாக ஆராய்க.

(i) தாராண்மைவாதம்

(ii) சோசலிசம்

(iii) பாசிசம் (10 × 2 = 20 புள்ளிகள்)

## பகுதி II

**4.** டொனமூர் அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்ட சர்வசன வாக்குரிமையின் அரசியல் மற்றும் சமூக தாக்கத்தினைப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

**5.** 1947 / 1948 ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்புடன் தொடர்புபடுத்தி பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைச்** சுருக்கமாக ஆராய்க.

(i) மகாதேசாதிபதி

(ii) செனட் சபை

(iii) பொதுச் சேவை ஆணைக்குழு

(iv) பாராளுமன்றின் இறைமை (10 × 2 = 20 புள்ளிகள்)

**6.** 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய அரசுப் பேரவையின் அமைவுச் சேர்க்கை மற்றும் மீயுயர்தன்மை பற்றி ஆராய்க. (20 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

7. இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதியுடன் தொடர்புபடுத்தி பின்வருவனவற்றினை ஆராய்க.

(i) ஜனாதிபதியினைத் தெரிவுசெய்யும் முறை (05 புள்ளிகள்)

(ii) ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் (15 புள்ளிகள்)

## பகுதி III

8. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(i) இந்திய சமஸ்டி முறையின் பிரதான பண்புகள்

(ii) பிரான்சின் தற்போதைய அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

(iii) ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் $(10 \times 2 = 20$ புள்ளிகள்)

9. 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் பிரதான பண்புகளை விளக்குக. (20 புள்ளிகள்)

10. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டுக்குச்** சிறுகுறிப்புகள் எழுதுக.

(i) அரசுக்குள்ளான மோதல்களுக்கான காரணங்கள்

(ii) பொதுக் கொள்கைக்கும் பணிக்குழுவுக்கும் (பணியகவமைப்பு) இடையிலான தொடர்பு

(iii) இலங்கையின் அரசியல் கட்சி முறைமையின் தற்போதைய போக்குகள்

(iv) இலங்கையின் விகிதாசார பிரதிநிதித்துவ முறை தொடர்பான விமர்சனங்கள்

(v) சர்வதேச அரசியலில் அரசு சார்பற்ற செயற்பாட்டாளர்களின் வகிபங்கு $(10 \times 2 = 20$ புள்ளிகள்)

* * *